# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590


## ஆணை நாள். 03.08.2026

## முன்னிலை

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA 13286/D/2025
## (W.P.(MD) No.11804 of 2026)

திரு R.U.கிருஷ்ணராஜ் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
செயல் அலுவலர்,
தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம்,
க.புதுப்பட்டி,
தேனி மாவட்டம் - 625 556. .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 28.03.2025 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 03.06.2025 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 29.08.2025 |

******

## ஆணை

இன்று 03.08.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு R.U.கிருஷ்ணராஜ் அவர்கள் நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திரு வெ.கணேசன், செயல் அலுவலர், க.புதுப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம், தேனி மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 28.03.2025 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுக்கா, புதுப்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட சர்வே எண்கள்.197/1, 199, 200/1, 201 மற்றும் 106 ல் உள்ள

3 ஏக்கர் 22 செண்டில் கட்டுப்பட்ட பதிவு எண்.74/79 பாலாஜி ஆயில் மில் மற்றும் ரைஸ்மில் மற்றும் பதிவு எண்.112/88 ஸ்ரீ லட்சுமி பைப் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனங்கள் சம்பந்தமான விண்ணப்பங்கள், க.புதுப்பட்டி பேரூராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகளின் பெயர் விவரம் தொடர்பான 21 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், செயல் அலுவலர், க.புதுப்பட்டி தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம், தேனி மாவட்டம் அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 03.06.2025 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 29.08.2025 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். பின்னர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD) No.11804 of 2026-ஐத் தாக்கல் செய்ததன் அடிப்படையில், மாண்பமை சென்னை உயர் நிதிமன்றம் மதுரை கிளை 22.04.2026 தேதியிட்ட உத்திரவில் மேல்முறையீட்டாளருடைய 28.03.2025 தேதியிட்ட மனுவின் மீது குறிப்பிட்டுக்கோரும் பட்சத்தில் 2 மாதங்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பித்திருந்தது. மேற்படி உத்திரவு இவ்வாணையத்தில் 03.07.2026 அன்று பெறப்பட்டு, அதன்பேரில் மேற்படி வழக்கைச் சிறப்பினமாகக் கருதி இவ்வழக்கு இன்று (03.08.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தான் கோரிய தகவல்கள் அனைத்தும் பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்தில் இருந்தும் பொதுத் தகவல் அலுவலர் இதுநாள் வரையில், தனக்கு முழுமையான தகவலை வழங்கிய பொது அதிகார அமைப்புக்கு தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 20(1)இன்படி தண்டமும், பிரிவு 20(2)இன் படி துறை வாரியான நடவடிக்கை எடுக்க அரசிற்கு பரிந்துறைக்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார். மேலும் மனுதாரருக்கு கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்திய காரணத்தால், பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பிரிவு 19(8)(b)-இன் படி இழப்பீடு தொகை பெற்றுத் தருமாறும் ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுக்கா, புதுப்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட சர்வே எண்கள்.197/1, 199, 200/1, 201 மற்றும் 106 ல் உள்ள 3 ஏக்கர் 22 செண்டில் கட்டுப்பட்ட பதிவு எண்.74/79 பாலாஜி ஆயில் மில் மற்றும் ரைஸ்மில் மற்றும் பதிவு எண்.112/88 ஸ்ரீ லட்சுமி பைப் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை ஏற்கனவே ந.க.எண்.2516/2025/பேரூ3, 16.06.2025 மற்றும் ந.க.எண்.121/2025, 26.09.2025 ஆகிய நாளிட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரருக்கு முழுமையான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது. எனவே, ஆணையம், பொதுத் தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து, பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

- ***மனுதாரர் 6(1) மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை வழங்கும் நோக்கில், திரு வில்லியம் ஜேசுதாஸ், உதவி இயக்குநர், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், தேனி மண்டலம், மாவட்ட***

*ஆட்சியரகம், தேனி மாவட்டம் அவர்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 18(3)(b)-இன் கீழ் 1. அப்போதைய மற்றும் தற்போதைய பொதுத்தகவல் அலுவலர்கள் மற்றும் 2. அப்போதைய மற்றும் தற்போதைய மேல்முறையீட்டு அலுவலர்கள் மற்றும் மனுதாரரையும் விசாரணைக்கு அழைத்து, தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுக்கா, புதுப்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட சர்வே எண்கள்.197/1, 199, 200/1, 201 மற்றும் 106 ல் உள்ள 3 ஏக்கர் 22 செண்டில் கட்டுப்பட்ட பதிவு எண்.74/79 பாலாஜி ஆயில் மில் மற்றும் ரைஸ்மில் மற்றும் பதிவு எண்.112/88 ஸ்ரீ லட்சுமி பைப் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனங்கள் குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு, மனுதாரருக்கு உரிய தகவல்களை ஒவ்வொரு பக்கத்திலும் <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர், அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சல் கண்காணிப்பு சான்றின் நகல் (Proof of Postal Tracking) மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், தேனி மண்டலம், மாவட்ட ஆட்சியரகம், தேனி மாவட்டம், உதவி இயக்குநரின் விசாரணை அறிக்கை நகல் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 21.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு 1. தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் மற்றும் 2.தற்போதைய மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடப்படுகின்றது.*

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

<u>**வழக்கு எண்.**SA 13286/D/2025</u>

<u>**(W.P.(MD) No.11804 of 2026)**</u>

**பெறுநர்**

<u>**பொது அதிகார அமைப்பு**</u>

பொதுத் தகவல் அலுவலர்/
செயல் அலுவலர்,
தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகம்,
க.புதுப்பட்டி,
தேனி மாவட்டம் - 625 556.

<u>உரிய விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு:</u>
உதவி இயக்குநர்,
பேரூராட்சிகளின் உதவி
இயக்குநர் அலுவலகம்,
தேனி மண்டலம்,
மாவட்ட ஆட்சியரகம்,
தேனி மாவட்டம் - 31.

**<u>மனுதாரர்</u>**
திரு R.U.கிருஷ்ணராஜ்,
த/பெ. (லேட்) திரு உமாகாந்தன் (எ)
O.R.காந்தன்,
க.எண்.2-3-22, பழைய நூலகத்தெரு,
க.புதுப்பட்டி,
உத்தமபாளையம் தாலுக்கா,
தேனி மாவட்டம் - 625 556.

நகல்
பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
நந்தனம், சென்னை - 600 035.

***Copy to: File***
***VP / PA***